


பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலை மாநகராட்சி, ஈசான்ய மைதானத்தில் மாவட்ட நிர்வாகம், பள்ளிக்கல்வித்துறை மற்றும் பொது நூலக இயக்ககம் இணைந்து நடத்தும் மாபெரும் புத்தக திருவிழாவினை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### தலைமை: தொண்டாமுத்தூர் அ.ரவி, வரவேற்புரை: ஆர்.பரமேஸ்வரன், ஒருங்கிணைப்பாளர்: விக்கி (எ) பா.விக்னேஷ்குமார்!

# கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் உதயநிதி அகாடமி திறப்பு விழா!

### ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் வி.செந்தில் பாலாஜி - கே.இ.பிரகாஷ் எம்.பி. - மேயர் ந.தினேஷ்குமார்- டாக்டர். கோகுல் கிருபா சங்கர் பங்கேற்பு!'

கோவை, பிப்.16-

கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் உதயநிதி அகாடமி திறப்பு விழா நாளை (17.02. 2025 திங்கட்கிழமை) அன்னூர் அம்மணி அருணா காம்ப்ளக்ஸ் வளாகத்தில் பகல் 12.00 மணியளவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விக்கி (எ) பா.விக்னேஷ்குமார் ஒருங்கிணைப்பில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ. ரவி தலைமையில் அன்னூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.பரமேஸ்வரன் வரவேற்புரையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம், அன்னூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் நா.பழனிச்சாமி, அன்னூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் மு.தனபாலன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் க.நாகராஜ், பி.கே.அருணாச்சலம், வே.சூரியன்தம்பி, உதயநிதி பாபு, எம்.மனோஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

கழக துணை பொதுச் செயலாளர், ஆ.இராசா எம்.பி. அகாடமியை திறந்து வைத்து சிறப்புரையாற்று கிறார்.

இந்நிகழ்ச்சியில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், அவினாசி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர் கோகுல் கிருபா சங்கர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதில் மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் சி.ஆர். இராமச்சந்திரன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பா.அருண்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஏ.நந்தகுமார், மாவட்ட அவைத்தலைவர் நாபுருசோத்தமன்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.சண்முகசுந்தரம், டி.பி. சுப்பிரமணியன், அ.அசரப் அலி, சோமு (எ) த.சந்தோஷ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.பி. நாகராஜ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வி.சி.ஆறுக்குட்டி, கோவை மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், மாவட்ட துணைச்செ யலாளர்கள் ஆ.அசோக், பி.செந்தில், எஸ்.ஜெயந்தி, பொருளாளர் எஸ்.அப்துல் ரஹ்மான், மாவட்ட கவுன்சிலர் இ.ஆனந்தன், தலைமை செயற்குழு முன்னாள் உறுப்பினர் அன்னூர் ஆர்.நடராஜன், சென்னை பழனிச்சாமி, பேராசிரியர் தீர்த்தகிரி,

பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.முருகானந்தன், கே.ஜி.குருபிரசாத், ஆர்.எஸ். நவீன், வெ.குருபுத்திரன், ஆர்.கதிர்வேல்சாமி, எஸ்.பழனிச்சாமி, வி.பி.செல்வராஜ், ஆர்.தேவராஜ், க. வீரபத்திரன், பிரஸ் கே.சிவக்குமார், விஜயகுமார், எஸ். பூர்ணிமா, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.சுரேந்திரன், எம்.எம்.டி.கல்யாணசுந்தரம், எஸ்.கார்த்திக், எஸ்.பி.சுரேஷ்குமார், சி.எம்.கே.குமார், என்.ஏ.சாமிபையன், பகுதி கழகச் செய்லாளர்கள் எஸ். பொன்னுசாமி, சிவா (எ) பழனிச்சாமி, கே.அருள்குமார், ஜெ.எஸ்.சரத் விக்னேஷ், சி. லோகநாதன், கார்த்திக் கே. செல்வராஜ், மு.ராஜேந்திரன், எஸ்.ஜெய்லாப்தீன், கேபிள் மணி, நகர கழகச் செயலாளர்கள் அ.அறிவரசு, ப.முனுசாமி, மு.முகமது யூனுஸ், ஆர்.வெங்கடேஷ், பேரூர் கழகச் செயலாளர்கள் வெ. விஷ்வபிரகாஷ், வே.சுரேஷ், எஸ்.ஸ்ரீதரன், எம்.ஆர்.உதயகுமார், என்.ஜெனார்த்தனன், ப.சுரேந்திரன், ராமசந்திரன், சின்ராஜ், எ.கே. ரங்கசாமி, டி.வி.குமார், தண்டபாணி, அண்ணாதுரை, தண்டபாணி உள்பட கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

இறுதியில் அன்னூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர் பிரசாந்த் நன்றியுரையாற்றுகிறார்.

### அதிகரித்து வரும் கடன் தொல்லை – பயிர் இழப்பு காரணமாக

# விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் சிரமங்களை ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா?

### மக்களவையில் – டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, பிப்.16-

நாட்டில் விவசாயிகள் கடன் தொல்லை வருமானம் இழப்பு காரணமாக தற்கொலை செய்து இறப்பதை தடுக்க ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:-

நாட்டில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிதி உதவியை ஒன்றிய அரசு அதிகரித்துள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை? இல்லையென்றால் அதற்கான காரணங்கள் என்ன?

அதிகரித்து வரும் கடன்கள் மற்றும் பயிர் இழப்பு காரணமாக விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் சிரமங்களை ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா?

அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் விவசாயிகள் நெருக்கடியைத் தணிக்கவும் அவர்களின் உயிரைப் பாதுகாக்கவும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? .

அதற்கு ஒன்றிய அரசின் விவசாய மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

விவசாயம் பொதுவாக மாநில அரசின் அதிகார வரம்புக்குள் உள்ள துறை. மேலும் இந்திய ஒன்றிய அரசு பொருத்தமான கொள்கை நடவடிக்கைகள் பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் பல்வேறு திட்டங்கள்/திட்டங்கள் மூலம் மாநிலங்களின் முயற்சிகளை ஆதரிக்கிறது. இந்திய ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்கள்/திட்டங்கள் உற்பத்தி ஊதிய வருமானம் மற்றும் விவசாயிகளுக்கு வருமான ஆதரவை அதிகரிப்பதன் மூலம் விவசாயிகளின் நலனுக்காகவே உள்ளன.

2013-14-ஆம் ஆண்டில் ரூ.21933.50 கோடியாக இருந்த வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் (DA&FW) பட்ஜெட் ஒதுக்கீட்டை 2024-25ஆம் ஆண்டில் ரூ.1,22,528.77 கோடியாக அரசாங்கம் கணிசமாக உயர்த்தியுள்ளது.

விதைப்பதற்கு முன் முதல் அறுவடைக்குப் பின் வரை தடுக்க முடியாத அனைத்து இயற்கை ஆபத்துகளிலிருந்தும் விவசாயிகளுக்கு பயிர்களுக்கு விரிவான ஆபத்து காப்பீட்டை உறுதி செய்வதற்கும், போதுமான கோரிக்கை தொகையை வழங்குவதற்கும் எளிமையான மற்றும் மலிவு விலையில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை வழங்குவதற்காக பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) 2016 இல் தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டம் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்டு அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கிறது. காப்பீடு செய்யப்பட்ட விவசாயிகளின் விண்ணப்பங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இது உலகின் மிகப்பெரிய பயிர் காப்பீட்டுத் திட்டமாகும்.

விவசாயிகளின் ஒட்டு மொத்த வருமானத்தையும் விவசாயத் துறையில் ஊதிய வருமானத்தையும் மேம்படுத்துவதற்காக DA&FW ஆல் தொடங்கப்பட்ட சில முக்கிய திட்டங்கள்/திட்டங்களின் சுருக்கம் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு

பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி

வேளாண் உள்கட்டமைப்பு நிதி (AIF)

நோக்கம்

சிறிய நிலங்களை வைத்திருக்கும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தும் ஒரே நோக்கத்துடன் பிரதமர் கிசான் சம்மன் நிதி திட்டம் 2019 இல் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் ஆண்டுக்கு ரூ.6000ஐ 3 சம தவணைகளில் வழங்குகிறது. இதுவரை தகுதியுள்ள விவசாயிகளுக்கு 18 தவணைகள் மூலம் ரூ.3.46 லட்சம் கோடிக்கு மேல் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண் உள்கட்டமைப்பு நிதி என்பது வட்டி மானியம் மற்றும் கடன் உத்தரவாத ஆதரவு மூலம் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை உள்கட்டமைப்பு மற்றும் சமூக விவசாய



சொத்துக்களுக்கான சாத்தியமான திட்டங்களில் முதலீடு செய்வதற்கான நடுத்தரநீண்ட கால கடன் நிதி வசதியாகும்.

திட்டத்தின் கீழ் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் ஆண்டுக்கு 3% வட்டி மானியம் மற்றும் CGTMSE இன் கீழ் ரூ. 2 கோடி வரையிலான கடன்களுக்கு கடன் உத்தரவாதக் காப்பீடு மூலம் 1 லட்சம் கோடி ரூபாய் கடன்கள் வழங்கப்படும். மேலும் ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறு LGD குறியீடுகளில் அமைந்துள்ள 25 திட்டங்கள் வரை இந்தத் திட்டத்தின் பலனைப் பெற தகுதியுடையவை.

**புதிய 10,000 FPOS உருவாக்கம் மற்றும் ஊக்குவித்தல்**

இந்திய அரசு 2020ஆம் ஆண்டில் “10,000 விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளை (FPOs) உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல்” என்ற மத்தியத் துறைத் திட்டத்தை (CSS) அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தின் மொத்த பட்ஜெட் செலவு ரூ.6865 கோடி ஆகும். FPOS உருவாக்கம் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவை இதன் மூலம் செய்யப்பட உள்ளன. செயல்படுத்தும் நிறுவனங்கள் (IAs), கிளஸ்டர் அடிப்படையிலான வணிக அமைப்புகளை (CBBOs) இணைத்து, 5 ஆண்டுகளுக்கு FPOக்களை உருவாக்கி அவர்களுக்கு தொழில்முறை ஆதரவு ஆதரவை வழங்குகின்றன.

பிரதான் மந்திரி அன்ன தாதா சன்ரக்ஷன் அபியான் ஆஷா)

பிரதான் மந்திரி அன்ன தாதா AI சன்ரக்ஷன் அபியான்) திட்டம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு லாபகரமான விலையை உறுதி செய்கிறது மற்றும் விற்பனை நெருக்கடியைத் தடுக்கிறது. இது குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) பொறிமுறையை வலுப்படுத்துவதையும் விவசாயிகளுக்கு சிறந்த விலை ஆதரவை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒன்றிய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டங்கள்!

(அ) வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை (DA&FW) ராஷ்ட்ரியயா கிரிஷி விகாஸ் யோஜனா (RKVY) மற்றும் கிருஷோன்னதி யோஜனா (KY) என இரண்டு ஒருங்கிணைந்த திட்டங்களை செயல்படுத்துகிறது. RKVY நிலையான விவசாயத்தை ஊக்குவிப்பதற்காகவும்> KY உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாய தன்னிறைவை நிவர்த்தி செய்வதற்காகவும் உள்ளது. RKVY மற்றும் KY இன் கூறுகள் பின்வருமாறு:

i. ராஷ்ட்ரிய க்ரிஷி விகாஸ் யோஜனா:

ராஷ்ட்ரிய க்ரிஷி விகாஸ் யோஜனா விரிவான திட்ட அறிக்கை அடிப்படையிலான திட்டங்கள் (RKVYDPR)

ii. மண் ஆரோக்கியம் மற்றும் வளம் (SHF)

iii. மானாவாரி பகுதி மேம்பாடு (RAD)

iv. ஒரு துளிக்கு அதிக பயிர் (PDMC)

V பயிர் பல்வகைப்படுத்தல் திட்டம் (CDP),

vi. பரம்பரகத் க்ரிஷி விகாஸ் யோஜனா (PKVY)

vii. வேளாண் இயந்திரமயமாக்கல் மீதான துணைத் திட்டம் (SMAM)

viii. வேளாண்வனவியல் கி ரு ஷ் ே ண ா ன் ன ா தி யோஜனா

i. தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து திட்டம் (NFSNM)

ii. தேசிய உண்ணக்கூடிய எண்ணெய்கள் மீதான திட்டம் (NMEO)எண்ணெய் பனை

iii.தேசிய உண்ணக்கூடிய எண்ணெய்கள் மீதான திட்டம் (NMEO)எண்ணெய் விதைகள்

iv.தோட்டக்கலையின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான திட்டம் (MIDH)

v. ஒருங்கிணைந்த வேளாண் சந்தைப்படுத்தல் திட்டம் (ISAM)

vi. வடகிழக்கு பிராந்தியத்திற்கான கரிம மதிப்பு சங்கிலி மேம்பாட்டு நோக்கம்

vii. வேளாண் விரிவாக்க துணை இயக்கம் (SMAE)

viii. டிஜிட்டல் வேளாண்மை

(ஆ). இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம்

விவசாய மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழ் நாடு முழுவதும் இயற்கை விவசாயத்தை ஒரு முழுமையான மத்திய நிதியுதவி திட்டமாக ஊக்குவிக்க இந்திய அரசு இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMNF) ஐ தொடங்கியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

### கடல் ஆமைகளைப் பாதுகாக்க

# விசைப் படகுகளில் நவீன கருவி பொருத்தப்படும்!

### அமைச்சர் க.பொன்முடி பேட்டி!

சென்னை, பிப். 16-

“கடல் ஆமைகளைப் பாதுகாக்க விசைப்படகுகளில் நவீன கருவி பொருத்தப்பட்டு படகின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும் என அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

தமிழக வனத்துறை, மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கடலோர காவல்படை, இந்திய கடற்படை மற்றும் கடல் ஆமை பாதுகாப்பில் உள்ள தன்னார்வ அமைப்பினர் கலந்து கொண்ட கடல் ஆமைகள் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம், சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று



முன்தினம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களுக்கு அமைச்சர் பொன்முடி அளித்த பேட்டி வருமாறு:-

வேட்டையாட தடை செய்யப்பட்ட பட்டியலில் ஆமைகள் உள்ளன. முட்டையிடும் காலகட்டத்தில் அவை கடற்கரையில் இருந்து 5 கடல்மைல் (9 கி.மீ.) தூரத்திற்கு வருகின்றன. அந்த 9 கி.மீ. பகுதியில் நாட்டுப் படகில் சென்று மீன் பிடிப்பதினால் பிரச்சினைகள் எழுவதில்லை. ஆனால் விசைப் படகுகள் செல்லும்போது ஆமைகளுக்குப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்த பகுதியில் விசைப்படகுகள் மூலம் மீன் பிடிக்கும் போது ஆமைகளும் சிக்கிவிடுகின்றன. இதை தடுப்பதற்காக வனத்துறை மற்றும் மீன்வளத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

கடல் ஆமைகளைப் பாதுகாப்பதில் மீனவர்கள் ஒத்துழைக்க வேண்டும். அவை மீன்பிடி வலைகளில் சிக்கி இறந்துவிடக் கூடாது என்பதுதான் அரசின் நோக்கம். எனவே இதுகுறித்து மீனவர்களிடையே ஒரு கருத்தை உருவாக்குவதென்று அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பணியில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவார்கள். இதற்கான விசைப் படகுகளில் ஒரு நவீன கருவி பொருத்தப்பட்டு, அதன் மூலம் படகின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும். மீன்வளத் துறை இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி கூறினார்.

### திருவள்ளூர் மாவட்டத்தில் 8 கிராம் தங்க நாணயத்துடன்

# 181 பயனாளிகளுக்கு திருமண நிதியுதவி!

### அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர், பிப்.16-

திருவள்ளூர் மாவட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம்! பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்! திட்டம் 10 ஆண்டுகள் நிறைவு பெற்றதற்கான நிகழ்ச்சியில் மகளிர்க்கு திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் 181 பயனாளிகளுக்கு ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் 8 கிராம் தாலிக்கு தங்க நாணயத்துடன் திருமண நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார் .

சட்டமன்ற உறுப்பினர்கள் திருத்தணி எஸ்.சந்திரன், டி.ஜே.கோவிந்தராஜன், துரை சந்திரசேகர் முன்னிலையில் வகித்தார்கள்.

இதில் சிறப்பு அழைப்பாளராக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு 181 பயனாளிகளுக்கு 8 கிராம் தாலிக்கு தங்கம் நாணயம் திருமண நிதி உதவி வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேசியதாவது:-

திருவள்ளூர் மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பில் மகளிர் (ம) பெண் குழந்தைகளின் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக, பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் (BBBP) என்ற திட்டம் துவங்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவு பெற்றதற்கான கொண்டாட்ட நிகழ்ச்சி நடைபெறுகிறது .

திருவள்ளூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் அதிக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்தியமைக்காக, சிறப்பாக செயலாற்றியமைக்கு திருவள்ளூர் மாவட்டத்திற்கு 2019ஆம் ஆண்டு இந்திய அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சக விருது மற்றும் 2023ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு விருதினையும் நாம் பெற்றுள்ளோம். தொடர்ச்சியாக பெண்களின் பாதுகாப்பிற்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும் மற்றும் பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்கும் தொடர்ந்து விழிப்புணர்வு கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறோம் .

குழந்தைகளுக்கான உதவி எண்: 1098,பெண்களுக்கான உதவி எண்: 181வலைத்தள பாதுகாப்பு எண்: 1930 கல்வி உதவி வழி காட்டி எண்:14417

குழந்தைகள் பாதுகாப்பு, பெண்களின் பாதுகாப்பு, குழந்தை திருமணங்களை தடுத்தல் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக மேற்காணும் இலவச உதவி எண்களை 24 x 7 மணி நேரமும் தொடர்பு கொண்டு, பெண்களின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்ற த்தினை உறுதி செய்யலாம். இதனை மையப்படுத்தி பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம்,10 ஆண்டுகள் நிறைவுப் பெற்றதற்கான நிகழ்ச்சியுடன் மகளிருக்கான திருமண நிதியுதவி திட்டத்தில் தங்க நாணயம் வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதாவது தமிழக அரசின் சிறப்புத் திட்டமாக மகளிருக்கு உதவிடும் வகையில், கீழ்காணும் நான்கு வகையான திருமண நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.1 ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதயுதவித் திட்டம், 2 அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு கலப்பு திருமண நிதியுதவித் திட்டம். 4 டாக்டர். தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண திருமண நிதியுதவித் திட்டம் என நான்கு திருமண நிதியுதவித் திட்டங்களிலும் மணப் பெண்ணிற்கு திருமண நிதியுதவி வழங்குவதற்கு திருமண நிதியுதவியாக பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு (Graduates /Diploma Holders) பயின்று தேர்ச்சிப் பெற்ற பெண்ணிற்கு திருமண நிதியுதவியாக ரூ.50,000/ மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்காக 22 காரட் கொண்ட 8 கிராம் தங்கம் மற்றும் பத்தாம் வகுப்பு பயின்று தேர்ச்சிப் பெற்ற பெண்ணிற்கு திருமண நிதியுதவியாக ரூ.25, 000/த்துடன் திருமாங்கல்யம் செய்வதற்கான 22 காரட் கொண்ட 8 கிராம் தங்கம் வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை 2021-2022, 2022-2023 (ம) 2023-2024-ஆம் நிதியாண்டிற்கு திருவள்ளூர் மாவட்டத்தில் 5118 பயனாளிகளுக்கு ரூ.20.5 கோடி (இருபது கோடியே ஐந்து இலட்சம்) மதிப்பிலான 40.92 கிலோ கிராம் தங்க நாணயங்கள் மற்றும் ரூ.22.97 கோடி (இருபத்து இரண்டு கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சம்) மதிப்பிலான திருமண நிதியுதவித் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5118 பயனாளிகளுக்கும் நேரடியாக அவரவர் வங்கி கணக்கில் தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் தற்பொழுது 2024—2025-ஆம் நிதியாண்டிற்கு திருவள்ளூர் மாவட்டத்தில் 181 பயனாளிகளுக்கு ரூ.1.11 கோடி (ஒரு கோடியே பதினோரு இலட்சம்) மதிப்பிலான 1.45 கிலோ கிராம் தங்க நாணயங்கள் மற்றும் ரூ.74 இலட்சம் (எழுபத்து நான்கு இலட்சம்) மதிப்பிலான திருமண நிதியுதவித் தொகை இன்றைய தினம் வழங்கப்பட உள்ளது.

இது மட்டுமல்லாமல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி சிறப்பாக முறையில் கண்காணிக்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.


இவ்வாறு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் பொது வெங்கட்ராமன், திருவள்ளூர் நகர் மன்ற தலைவர் உதயமலர்பாண்டியன், மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பொது மேலாளர் சங்கிலிரதி, சமூக நலத்துறை கண்காணிப்பாளர் பார்த்திபன் நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், டாக்டர் வி.சி.ஆர். குமரன், ப.சிட்டிபாபு, ஜி.விமல்வர்ஷன், கூளூர் எம்.ராஜேந்திரன், மோ. ரமேஷ், எஸ்.மகாலிங்கம், டி.கே.சந்திரசேகர், கே.சுரேஷ்குமார், டி.மோதிலால், டி.கே.பாபு, வி.தியாகராஜன், பி.கே.நாகராஜ், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு

### பிப்ரவரி 16 (1978)



**கழகம் தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பின்னர், கழகத்தில் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும், வெளியீட்டுச் செயலாளராகவும் பணியாற்றினார்.**

**1953களில் தீப்பொறி என்ற ஏட்டை சொந்தமாக நடத்தினார். 1959களில் இனமுழக்கம் என்ற ஏட்டிற்கு ஆசிரியராக இருந்தார்.**

**சிந்தனையை கிளறிவிடும் பேச்சாளர். நாடகங்கள் மற்றும் திரைப்படத்திற்கு உரையாடல்கள் எழுதியிருக்கிறார்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் சி.பி.சிற்றரசு அவர்களை தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கி மேலவைத் தலைவராக தேர்ந்தெடுக்கச் செய்தார்.**

**1989ல் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு “சிந்தனைசிற்பி சிற்றரசு” பெயரை தலைவர் கலைஞர் சூட்டினார்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.